02.04.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 205/2018</u>

அ.சா.14

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவி | | |
| க/பெ | சிவகடாட்சம் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 59/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது _**விழுப்புரம் இருப்புபாதை காவல் நிலையத்தில் தனிப்பிரிவு சிறப்பு உதவி காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டு அதே காவல் நிலையத்தில் தனிப்பிரிவு தலைமை காவலராக பணியில் இருந்தபோது 6.05.2014ம் தேதி காலை 9 மணிக்கு நிலையம் வந்தேன். அப்போது பர்ஸ் காணவில்லை என்று அசாரியா என்பவர் புகார் அளிக்க வந்திருந்தார். அதன் பேரில் ஜெயவேல் என்பவரை நிலையம் அழைத்து வந்தனர். பிறகு அவரிடம் விசாரணை செய்தார்கள். விசாரணை செய்தபோது ஜெயவேல் என்பவரை கையால் 2 அடி அடித்தார்கள். அப்போது நான் ஆய்வாளர் வாசுதேவன் மீட்டிங் சென்றுள்ளார் ஏன்றும் அவர்கள் வந்த பிறகு ஏதாவது விசாரணை செய்யுங்கள் என்று கூறினேன். அதன் பிறகு அவர் எதுவும் அடிக்கவில்லை. 8 மணிக்கு ஆய்வாளர் அவர்கள் மீட்டிங் முடிந்து நிலையம் வந்தார்கள். அப்போது ஜெயவேலிடம் விசாரணை செய்தார்கள். நான் மேற்படி தகவலை திருச்சி தனிப்பிரிவு அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தேன். அதன்பேரில் அலுவலகத்தில் இருந்து சந்தேக நபர்கள் யாரையும் இரவு நேரத்தில் நிலையத்தில் வைக்க கூடாது என்றும் கூறினார்கள். அதை நான் ஆய்வாளரிடம் கூறினேன். ஆ ய்வாளர் அவர்கள் மேற்படி

விசாரணை முடித்து நான் அனுப்பி விடுகிறேன் என்று கூறியதன்படி நான் 8.30 மணி அளவில் வீட்டிற்கு சென்று விட்டேன். மறுநாள் 07.5.2014 காலை 9 மணிக்கு காவல் நிலையம் வந்தேன். அப்போது பாராகாவலர் ஜெயவேல் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரை ஜீப்பில் ஏற்றி ஆய்வாளர் வாசுதேவனும் பாலமுருகன், திருக்குமரன், லோகேஷ் ஆகியோர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறினார்கள். நான் மேற்படி தகவலை உடனே தனிப்பிரிவு அலுவலகத்திற்கு தெரிவித்தேன். பிறகு நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்றேன். 1 மணிக்கு ஜெயவேலை அழைத்து வந்தார்கள். மருத்துவர்கள் ஜெயவேலின் உடலை பரிசோதனை செய்த பிறகு அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தார்கள். உடனே மேற்படி தகவலை என் உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து விட்டேன். உயர் அதிகாரிகள் நிலையம் வந்து விட்டார்கள். மற்றும் மாவட்ட காவல் அதிகாரிகள் நிலையம் வந்து விட்டார்கள். மேற்படி உயர் அதிகாரிகள் ஜெயவேல் இறந்தது சம்மந்தமாக என்னையும் விசாரணை செய்தார்கள். மேலும் விழுப்புரம், வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எங்கள் காவல் நிலைய பதிவேடுகளின் படி 7ம் தேதிதான் புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 1.5.2014 தேதி அன்று தான் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு நடந்தது என்றால் சரிதான். அன்றிலிருந்து ரயில்வே போலீசார் மற்றும் மாவட்ட லோக்கல் போலீசார் திருச்சியில் இருந்து வந்த ரயில்வே போலீசார் ஆகியோரை வைத்து தனிப்டைகள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு பணி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் பிக்பாக்கெட் அடிக்கப்பட்டு அதில் ஈடுபட்டவர் பொதுமக்கள் துரத்தி சென்றதால் ரயில்வே தண்டவாளத்தில் உருண்டு பிரண்டு ஓடியதாகவும் அதனால் ரயில்வே இரும்பு தண்டவாளத்தில் அடிபட்டு காயங்கள் ஏற்பட்டதாக தான் முதலில் புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது காவல் நிலையத்தில் எனக்கு பாரா பணி 8 மணிக்கு ஆரம்பித்து மறுநாள் 8 மணிக்கு முடியும் என்றால் எனக்கு 24 மணி நேர பாராபணியும் உள்ளது 8 மணி நேர

சிப்ட் பணியும் உள்ளது. நான் காவல் நிலையத்தில் சம்பவ சமயத்தில் தனிப்பிரிவு காவலராக இருந்தேன். எனக்கு 24 மணி நேரமும் பணி என்றால் சரிதான். நான் குற்ற நிகழ்வுகளை குறித்து தகவல் சேகரித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் அளிப்பது என் பணி என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் அதுபோன்று எந்த பணியும் செய்யவில்லை. 6ம் தேதி அன்று திண்டிவனம் ஆய்வாளர் பாலோஸ் தலைமையில் தான் ரோந்து பணி நடை பெற்றது என்றால் சரிதான். இந்த வழக்கில் லோகேஷ் என்பவர் அரசு தரப்பு சாட்சியாக உள்ளார். அவரும் நானும் எதிரிகளும் ஒன்றாக ஒரே அணியில் பணி புரிந்தோம் என்றால் சரிதான். அந்த லோகேஷ் என்பவர் மூலம் பல செயின் பறிப்பு உட்பட திருட்டு சம்பவங்கள் நடைபெற்றது என்றால் சரியல்ல. அதேபோல் ரயில்வே நடைமேடையில் பாஸ்கரன் என்ற ரயில்வே டெக்னீசியன் வேலை செய்தார் என்றால் சரிதான். அவருக்கு குடும்பமும் இல்லை, தனியாகதான் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவருக்கு எடுபிடி வேலை செய்வதுதான் இறந்த ஜெயவேலின் வேலை என்றால் அவருக்கு நண்பராக இருந்தார் என்று தெரியும். அதேபோல் லோகேஷ் என்பவர் ரயில்வே நிலையத்தில் பல திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்தார் என்றும் அவருக்கும் பாஸ்கருக்கும் இடையே நெருக்கமான நட்பு இருந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதேபோல் ரயில்வே துறை உயர் அதிகாரிகள் மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு புகார் அனுப்புவதை ஜெயவேலுக்காக பாஸ்கர்தான் செய்து வந்தார் என்றால் சரியல்ல. லோகேஷ் என்ற காவலர்தான் ஜெயவேலுவை அடித்து கொலை செய்தார் என்றால் சரியல்ல. குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடைப்பட்ட காலத்தை பயன்படுத்தி அவருடைய இறப்பிற்கு காரணமாக இருந்ததை மறைப்பதற்கு அவருக்கு வேண்டியவர்களை சாட்சியாக வைத்து காவல் துறை விசாரணையிலும், நீதித்துறை நடுவர் விசாரணையிலும் பொய் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் இதுகுறித்து எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. சிபிசிஐடி போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் அவர்களுக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 2014ல் விழுப்புரம் ரயில்வேயில் தனிப்பிரிவில் நான் பணிபுரிந்தபோது

எனக்கு உயர் அதிகாரி தனிப்பிரிவு ஆய்வாளர் திருச்சி ரயில்வே என்றால் சரிதான். ஜெயவேல் இறந்த பின்பு ஜெயவேல் இறப்பு தொடர்பாக விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண் 1 எங்கள் காவல் நிலையத்தில் இருந்த அனைத்து காவலர்களையும் விசாரணை செய்தார் என்றால் சரிதான். நான் சம்பவம் தொடர்பாக தெரிந்து இருந்தாலும் தற்போது நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை நீதித்துறை நடுவரிடம் சொல்ல முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னதை எழுத்து மூலமாக எழுதி உயர் அதிகாரிகளுக்கு புகார் அளிக்க நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எப்போதும் ஒரு தனிப்பிரிவு காவலரின் பணி என்னவென்றால் 24 மணி நேரமும் காவல் நிலையத்தில் இருப்பதுதான் என்றால் சரிதான். எஸ் பி காவலரின் வேலையே காவல் நிலைய எல்லைக்குட்பட்ட எல்லா விசயங்களையும் எஸ் பிக்கு உடனுக்குடனே தெரிவிக்க வேண்டியது என்றால் சரிதான். தேவைப்பட்டால் ரயில்வே நிலையத்திற்கு சென்று அங்கு என்ன நடக்கிறதோ அதை அனைத்தையும் அப்படியே சொல்லிதான் ஆக வேண்டும் என்றால் சரிதான். தற்போது இந்த வழக்கு சம்மந்தமாக என்னை சிபிசிஐடி காவல் துறையினர் எப்போது விசாரித்தார்கள் என்றால் ஜெயவேல் இறந்து 1 வருடம் கழித்து என்னை விசாரித்தார்கள். விசாரித்த காலத்தில் 8.5.2014 ம் தேதி ஜெயவேல் இறப்பு சம்மந்தமாக நீதித்துறை நடுவர் விசாரித்தபோது நான் ஏன் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்ற விவரத்தை சிபிசிஐடி போலீசாரிடம் நான் கூறவில்லை. அதேபோல் ஜெயவேல் இறப்பு சம்மந்தமாக ரயில்வே டிஸ்பி விசாரித்தபோதும் நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை அவரிடமும் சொல்லவில்லை. இந்த வழக்கின் புகார் தாரர் அசாரியா என்பவரை எனக்கு நேரடியாக தெரியாது. என்னை சிபிசிஐடி போலீசார் விசாரித்தபோது அசாரியாவை எப்படி தெரியவந்தது என்ற விவரத்தை சொல்லியுள்ளேன். 6.5.2014 அன்று காலை 9 மணிக்கு நிலையம் வந்தேன் என்ற விவரத்தை நான் சிபிசிஐடி போலீசாரிடம் சொல்லியுள்ளேன்.6.5.2014 அன்று என்னை சிபிசிஐடி போலீசார் விசாரிக்கும்போது நான் மணி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை. 6.5.2014 அன்று ஆய்வாளர் மீட்டிங் முடிந்து விழுப்புரம் வந்த பிறகு ஜெயவேலுவை விசாரித்தார் என்ற விவரத்தை நான் தனிப்பிரிவு போலீசாருக்கு சொன்னேன் என்பதை நான் சிபிசிஐடி போலீஸில் சொன்னேன். அந்த

தகவலை எழுத்து மூலமாக சொன்னேனா அல்லது வாய்மொழியாக சொன்னேனா என்றால் வாய்மொழியாக சொன்னேன். அப்போது தனிப்பிரிவு ஆய்வாளர் அலெக்ஸ் ஆவார். இந்த விஷயத்தை உறுதி படுத்துவதற்காக அலெக்ஸை கூப்பிட்டு என் முன்னிலையில் இப்படி சொல்கிறார்கள் அது உண்மையா இல்லையா என்பதை பற்றி விசாரித்தார்கள் ஆனால் வாக்குமூலம் பதிவு செய்தார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது. நான் தகவல் சொன்ன பிறகு என்னுடைய உயர் அதிகாரி இந்த ரயில்வே காவல் நிலையத்தில் சந்தேகப்படும் நபர் யாரையும் இரவு நேரத்தில் வைக்கக் கூடாது என்று கூறினார்கள் என்ற விவரத்தை நான் சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். நான் ஆய்வாளரிடம் இதுகுறித்து நான் ரயில்வே ஆய்வாளருக்கு சொல்ல முடியாது நீங்களே சொல்லிவிடுங்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். இந்த விஷயத்தையும் நான் சிபிசிஐடி விசாரணையில் சொன்னேன். நான் நேரடியாக ஆய்வாளரிடம் போய் இந்த விஷயத்தை சொன்னதாகவும், அவர் விசாரணை முடித்து விசாரித்து அனுப்பி விடுவதாக சொன்ன விவரத்தை நான் சிபிசிஐடி போலீசாரிடம் சொன்னேன். மறுநாள் காலையில் தான் நான் பணிக்கு வந்தேன். அதன் பிறகு மீதி விஷயங்கள் அனைத்தும் நான் கேள்வி பட்டதுதான். முதல் முதலில் காவல் நிலையத்தில் ஏதாவது பிரச்சனை என்றால் எஸ் பி தனிப்பிரிவை தான் விசாரிப்பார்கள் என்றும் அவர்கள் சொல்வதை வைத்துதான் மேலும் விசாரணை நடைபெறும் என்று சொன்னால் சரிதான். ஜெயவேல் இறந்த பிறகு உடனடியாக இரயில்வே போலீசார் என்னை எனது உயர் அதிகாரிகள் ஜெயவேல் இறந்தது தொடர்பாக தொடர்பு கொண்டார்கள் என்றும், அப்போது என்னுடைய அலைபேசி அணைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. வந்த பிறகு என்னை அவர்கள் தேடினார்கள் என்றும் நான் அப்போது இல்லை அதனால் தான் ஜெயவேல் இறப்பு தொடர்பாக நான் எழுத்து பூர்வமான புகாரோ வாக்குமூலமோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 6.5.2014 அன்று நான் காவல் நிலையத்திற்கு வரவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. 6.5.2014 அன்று வராத நான் ஜெயவேல் என்றைய தேதியில் காவல் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டார் என்று தெரியாததாலும் அதற்கு பயந்து கொண்டு 8.5.2014 அன்று நீதித்துறை நடுவரிடம் நான் முதல் விசாரணையில் சொன்ன

விஷயங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் இதுசம்மந்தமாக நாங்கள் சொல்வதுபோல் 6.5.2014 அன்று தான் ஜெயவேல் காவல் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டார் என்றும் அவர்மீது ஒரு நபர் புகார் கொடுத்தார் என்றும், தங்களது வாக்குமூலத்தில் சொல்ல வேண்டும் என்றும் அதையே நீதிமன்றத்தில் சொல்ல வேண்டும் என்றும், இல்லை என்றால் என்னை பணி நீக்கம் செய்ய சிபாரிசு செய்ய நேரிடும் என்று சொன்னதன் பேரில் அவருக்கு பயந்து கொண்டு 3ம் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவருக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

2,4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை இல்லை**